# 10 ஆலய வழிபாடு

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதி வடிவான இறைவன் ஆன்மாக்களின் வழிபாட்டை ஏற்று அருள் புரியும் இடம் ஆலயமாகும். சைவசமயிகளுக்கு ஆலய வழிபாடு மிகவும் இன்றியமையாதது. இத்தகைய கோயில்களுக்கு நாள் தோறும் சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். தினமும் செல்ல முடியாதவர்கள் செவ்வாய், வெள்ளி, மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, தைப்பொங்கல் ஆகிய விஷேட விரத நாட்களில் சென்று வழிபடலாம்.

ஆலயம் புனிதமான இடமாதலால் அங்கு செல்வோர் நீராடி தோய்த்துலர்ந்த ஆடையணிந்து செல்ல வேண்டும். செல்லும் போது பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், தேங்காய், பால், இளநீர், பூக்கள் முதலிய பொருட்களைத் தூய்மையான தட்டில் வைத்து அரைக்கு மேல் தாங்கி இறை சிந்தையுடன் செல்ல வேண்டும்.



ஆலயத்தை அண்மித்ததும் கை, கால், கழுவி சிவநாமங்களை உச்சரித்த வண்ணம் தூலலிங்கமாகிய கோபுரத்தை முதலில் வணங்க வேண்டும். ஆலயத்திற்கு உள்ளே சென்று கொடித்தம்பத்தையும், பலிபீடத்தையும் வணங்கி அப்பால் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

அதனை அடுத்து முதலில் விநாயகரை வழிபடுதல் வேண்டும். மூலமூர்த்தியாகிய சிவபிரானையும் உமாதேவியாரையும் வணங்கி அர்ச்சனை செய்வித்து விபூதி வாங்கித் தரித்துக் கொள்ள வேண்டும். அதன் பின் நடராஜர், தட்சணாமூர்த்தி, சோமஸ்கந்தர்,சந்திரசேகர், சுப்பிரமணியர், வைரவர் முதலிய மூர்த்திகளை வழிபடும்போது இரண்டு கைகளையும்

மார்பில் / சிரசில் குவித்து வழிபட்டு இறுதியாக சண்டேஸ்வரரை வணங்கி மூன்று முறை கைக்கொட்டி சிவதரிசன பலனைத் தந்து உதவுமாறு பிரார்த்திக்க வேண்டும்.

ஆலயத்தின் வலப்பக்கமாக வந்து சிவ சந்நிதியை அடைந்து இடபதேவருடைய கொம்பின் நடுவாக சிவலிங்கப் பெருமானை வணங்கி பலிபீடத்திற்கு அப்பால் மும்முறை வணக்கம் செய்த பின்னர் அமைதியான ஓரிடத்தில் இருந்து திருவைந்தெழுத்து அல்லது இறைநாமத்தை இயன்றவரை உச்சரிக்க வேண்டும்.

ஆலயத்தில் நாம் செய்யக்கூடிய தொண்டுகள் பல உள்ளன. அவற்றுள் கோயிலைக்கூட்டுதல், கழுவுதல், பாத்திரங்கள் , விளக்குகள் என்பவற்றை விளக்குதல், தூபமிடுதல், விளக்கேற்றுதல், சாமரை வீசுதல், தீவர்த்தி பிடித்தல், குடை ,ஆலவட்டம், கொடி என்பனவற்றைப்பிடித்தல்,



ஆலயத் தொண்டுகள்

பூந்தோட்டம் அமைத்தல், பூந்தோட்டத்திற்கு நீர் ஊற்றுதல், பூக்கொய்தல், மாலைகட்டுதல் என்பனவும் ஆலயத்தொண்டுகளில் அடங்கும். அவ்வாறான செயல்களை நாமும் செய்ய முன்வர வேண்டும்.

ஆலயம் சென்று வழிபடுவதனால் ஐம்பொறிகளும் ஒடுங்கி மனம் ஒருநிலைப்பட வழியேற்படுகின்றது. மேலும் ஆலயத்தில் தெய்வ (ஒளி) அருள் நிறைந்திருப்பதால் எமது மனம் அமைதி பெறும், வாழ்வு வளம் பெறும், ஆன்மா ஈடேற்றமடையும்.

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''

## பயிற்சிகள்

1) ஆலயம் என்பதன் பொருள் யாது?
2) ஆலயத்திற்கு கொண்டு செல்லப்படும் பொருட்கள் எவை?
3) ஆலயத்தில் செய்யப்படும் நமஸ்காரங்களை குறிப்பிடுக
4) ஆலயத்தில் நீங்கள் செய்யும் தொண்டுகள் 05 தருக?
5) ஆலய வழிபாட்டின் நன்மைகள் 03 தருக?

**கீழே தரப்பட்ட சொற்களை வைத்து வெற்றிடம் நிரப்புக**

(ஆலயம், பூசைப்பொருட்கள், விநாயகர், சண்டேசுவரர், திருமுறைப்பாடல்கள்)

01) ஆன்மா லயப்படும் இடம்................. ஆகும்.
02) சுவாமி சந்நிதியில் ...................... ஓதல் வேண்டும்.
03) ஆலய வழிபாட்டில் முதலில் வழிபடும் தெய்வம் ................... ஆவார்.
04) ஆலய வழிபாட்டில் இறுதியாக வழிபடும் தெய்வம் ........................ ஆவார்.
05) பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், தேங்காய் என்பன........................ என அழைக்கப்படுகின்றன.

## செயற்பாடு

01) ஆலயத்தில் செய்யக்கூடிய தொண்டுகள் பற்றி சக மாணவர்களுடன் கலந்துரையாடல்

02) ஆசிரியருடன் பாடசாலைக்கு அருகிலுள்ள ஆலயத்திற்குச் செல்க. அங்கு நடைபெறும் வழிபாட்டு ஒழுங்குமுறையை அவதானித்தல். ஒவ்வொருவரையும் ஒழுங்கு முறையின்படி ஒழுகுவதற்கு வழிப்படுத்தல்.

## பாடச்சுருக்கம்

★ ஆன்மா லயப்படும் இடமாக ஆலயம் விளங்குகின்றது.

★ ஆலயத்திற்கு தினந்தோறும் செல்லல் சிறந்தது. முடியாதவர்கள் விஷேட தினங்களிலாவது சென்று வழிபடுவது அவசியம்.

★ ஆலயத்தில் நாம் செய்யக்கூடிய தொண்டுகள் பல உள்ளன.

★ ஆலயம் சென்று வழிபடுவதனால் மனம் ஒரு நிலைப்படுகின்றது